செ. கு. எண்: 112 நாள் :24.10.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 24.10.2015

சென்னை பெருநகர காவல், வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.சுரேஷ் அவர்கள் 7.6.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாநகரம், கே.கே.நகர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. P.குணசேகரன் அவர்கள் 8.6.2015 அன்று காவேரி பாலம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது நிலை தடுமாறி தடுப்புச் சுவற்றில் மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், ரோசணை காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C.கல்விகாத்தான் அவர்கள் 5.7.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாநகர மத்திய காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.நேதாஜி பாண்டியன் அவர்கள் 6.7.2015 அன்று பரப்பாளையம், திருப்பூர் மங்கலம் சாலை அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், சாயர்புரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. மாரியப்பன் அவர்கள் 29.6.2015 அன்று புதுக்கோட்டை – சாயர்புரம் ரோடு அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது நிலை தடுமாறி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 8.7.2015 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், பூந்தமல்லி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. N.சேகர் அவர்கள் 10.7.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. மாரிமுத்து அவர்கள் 10.7.2015 அன்று மண்டபம் ரயில்வே ரோடு அருகில் மயங்கி விழுந்து, பின்னர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ஜான் நியூட்டன் அவர்கள் 12.7.2015 அன்று இரு சக்கர வாகனத்தில் திருமங்கலம் நகர் அருகே சென்று கொண்டிருந்த போது நிலை தடுமாறி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு மழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், சின்னமனூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. V. ராமபாண்டியன் அவர்கள் 11.9.2015 அன்று உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், வடபாதிமங்கலம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு R. நாகராஜன் அவர்கள் 11.9.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் சேகர்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மாரியப்பன், மாரிமுத்து. ராமபாண்டியன்; தலைமைக் காவலர்கள் சுரேஷ், குணசேகரன், ஜான் நியூட்டன், நாகராஜன்; காவலர்கள் கல்விகாத்தான், நேதாஜி பாண்டியன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**

தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**